கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு ர.பாலமுரளி, எம்.ஏ.,எம்.எட்.,

 மூ.மு. எண்17987/அ1/2022 நாள். 15 –10–2024.

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக் கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக் காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு க.துரைசாமி என்பவரின் வாரிசுதாரர் மகன் திரு து.ராஜ்குமார், அரசு மேல்நிலைப் பள்ளி, பிச்சனூர், கோயம்புத்தூர் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வேண்டுதல் – தொடர்பாக |
| பார்வை: | 1) கோவை முதன்மைக் கல்வி அலுலரின் செயல்முறைகள் ந.க.எண் 6442/அ1/2021 நாள்.14.07.2021.<br>2) கோவை முதன்மைக் கல்வி அலுலரின் செயல்முறைகள் ந.க.எண் 17987/அ1/2022 நாள்.21.02.2023<br>3) அரசாணை (நிலை) எண் 48 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(Q) த்துறை நாள் 26.02.2021<br>4) அரசாணை நிலை எண்.151,பள்ளிக கல்வி(பக1(1)த் துறை நாள்.09.09.2022.<br>5) அரசுக் கடித எண் (efile), 4419/தொ.க1(1)/2024 நாள் 17.05.2024.<br>6) கோயம்புத்தூர், பிச்சனூர், அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் கடிதம் ந.க.எண் 1032/2022/2023 நாள்.16.11.2022.<br>7) சென்னை–6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண் 6956/ஜே/இ4/2023 நாள்.22.07.2024. |

கோயம்புத்தூர் மாவட்டம், உதவித் தொடக்கக்கல்வி அலுவலகம்,பேரூர், அலுவலக உதவியாளர் ஆகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 17.06.2012 அன்று காலமான திரு க.துரைசாமி என்பவரின் வாரிசுதாரர் மகன், திரு து.ராஜ்குமார் என்பவருக்கு பார்வை 1இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் கோயம்புத்தூர், பிச்சனூர், அரசு மேல்நிலைப் பள்ளி யில், இளநிலை உதவியாளர் ஆக 16.07.2021 முற்பகல் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை 6 ன்படி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் அரசுக் கடிதத்தில் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 5 ல் காணும் அரசுக் கடிதத்தின் படியும் பார்வை 6ல் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட அலுவலரின் பரிந்துரையின் பேரில் கோயம்புத்தூர், பிச்சனூர், அரசு மேல்நிலைப் பள்ளி, இளநிலை உதவியாளர், திரு து.ராஜ்குமார் என்பாருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் ஆக நியமனம் பெற்ற நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி பணியாளர் திரு து.ராஜ்குமார் என்பவர் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணிவிதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் அதன்பின்னரே இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவர் எனவும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு

அசல் பணிப்பதிவேடு மற்றும் கல்விச்சான்றுகளுடன்

முதன்மைக் கல்வி அலுவலர்
கோயம்புத்தூர் – 641001

14/10/24

பெறுநர்

திரு து.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் அரசு மேல்நிலைப் பள்ளி, பிச்சனூர், கோயம்புத்தூர் – தலைமை ஆசிரியர் மூலமாக.

நகல்

1) சென்னை, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2) தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, பிச்சனூர், கோயம்புத்தூர்